புதுடெல்லியில் கழக அலுவலகமான அண்ணா – கலைஞர் அறிவாலயத்தில் கழகத் தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் அகில இந்தியக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். உடன் கழகத் தொழில்நுட்ப அணி செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, பி.வில்சன் எம்.பி., கழக தொழில் நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின், துணைச் செயலாளர்கள் சேலம் தரணிதரன், மதுரை பாலா ஆகியோர் உள்ளனர்.

‘ஜனநாயகத்திற்கான இந்தியா !’

தலைநகரில் ஒருங்கிணைந்து ஒலித்த திராவிடம்!

புதுடெல்லியில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி கருத்தரங்கம்!

புதுடெல்லி, ஆக.7-

புதுடெல்லியில் உள்ள கழக அலுவலகமான அண்ணா கலைஞர் அறிவாலயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ஜனநாயகத்திற்கான இந்தியா (I.N.D.I.A. For Democracy) என்ற தலைப்பில் ஆகஸ்ட் 3அன்று கருத்தரங்கம் நடைபெற்றது.

தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் - தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா இரு அமர்வுகளைக் கொண்ட இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் முன்னெடுத்துள்ள ஜனநாயக இந்தியாவை மீட்கும் முயற்சியையும், திராவிட மாடலின் இந்திய அளவிலானத் தேவையையும், அதனை நாடு உணர்ந்திருப்பதன் விளைவுதான், இந்தியா கூட்டணி உருவாக்கம் என்பதை எடுத்துரைத்தார். கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் ஆதரவுடனும் இந்தக் கருத்தரங்கம் நடைபெறுகிறது என்பதை எடுத்துரைத்தார்.

பி.வில்சன் எம்.பி. கருத்து!

இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற அமர்வினைஒருங்கிணைத்து நோக்கவுரை ஆற்றிய கழக மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தனது உரையில், “காவிமய அரசியலுக்கு எதிராகவும் அதனை அப்புறப்படுத்தவும் ‘இந்தியா’ கூட்டணி உருவாகியுள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் ஜனநாயகம் மிகப் பெரிய அச்சுறுத்தலை இப்போது எதிர்கொள்கிறது. நாம் அறிவிக்கப்படாத எமர்ஜென்சியில் இருக்கிறோம். பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மாநிலங்களின் ஒன்றியமான இந்தியாவை, மாநகராட்சிநகராட்சிகளின் ஒன்றியமாக மாற்றிவிடும். அந்த ஆபத்தைத் தடுக்க 2024 தேர்தல் களம் அமைந்துள்ளது. அதனை எங்கள் கழகத் தலைவர் அவர்கள் விரிந்த அளவில் எடுத்துச் செல்ல விரும்புவதன் விளைவுதான் இந்தக் கருத்தரங்கம்” என விளக்கினார்.

ஜெயராம் ரமேஷ் எம்.பி. பேச்சு!

காங்கிரஸ்கட்சியின்மாநிலங்களவை உறுப்பினர்ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஜெயராம் ரமேஷ் உரையாற்றுகையில், அறிஞர் அண்ணாவின் நாடாளுமன்ற செயல்பாடுகளை விரிவாக எடுத்துக்கூறினார். “ஜனநாயக அடையாளங்களைக் காப்பாற்றுவதைவிட, ஜனநாயகத்தின் உணர்வுப்பூர்வமானத்தன்மையைக் காப்பாற்ற வேண்டும் என 1962ல் அண்ணா வலியுறுத்தினார். அண்ணாவின் தொலைநோக்கு சிந்தனைகள் இன்றைய அரசியல் களத்திற்குப் பொருந்துகின்றன. பா.ஜ.க. ஆட்சி மேற்கொள்ளும் நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுசீரமைப்பு நடவடிக்கையால் தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறையும். இதையும் அண்ணா அன்றே சுட்டிக்காட்டினார். மொழியியில் ஏகாதிபத்யம் போல, மறுவரை ஏகாதிபத்தியமும் ஆபத்தானது என எடுத்துரைத்தார்.

திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் எம்பி. ஜவகர் சர்க்கார் பேசுகையில், மோடி அரசால் பெரிய பணக்காரர்களுக்கு ரத்து செய்யப்பட்டுள்ள கடன் தொகையின் அளவு 12 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய். 9 ஆண்டுகளில் ரத்து செய்யப்பட்டள்ள இந்தத் தொகை, இதுவரை இருந்த ஆட்சிகளில் ரத்து செய்யப்பட்ட தொகைக்கு ஈடானது அல்லது அதற்கு கூடுதலானது” என்று புள்ளி விவரங்களுடன் விவரித்தார்.

பிரியங்கா சதுர்வேதி எம்.பி.

இந்த அமர்வில் சிவசேனா எம்.பி.பிரியங்கா சதுர்வேதி, “பா.ஜ.க. தன்னை வளர்த்துக் கொள்வதற்காக கூட்டணிக் கட்சிகளைக் கூட பலியிடும். மராட்டியமே அதற்கு சான்று” என்று ஆதாரங்களுடன் பேசினார். ஆம் ஆத்மி எம்.பி சஞ்சய் சிங், “இந்தியாவை மீட்பதற்கு இந்தியா கூட்டணி உருவாகியுள்ளது. நாடாளுமன்றத்தின் ஜனநாயகம் இல்லை. உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அவற்றை மீட்க வேண்டும்” என வலியுறுத்தினார்.

மனோஜ் ஜா எம்.பி.

ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோஜ் ஜா உரையாற்றும்போது, “எங்கள் கட்சியை, பீகாரின் தி.மு.க. என்றுதான் நான் சந்திக்கும் தி.மு.க. எம்.பி.க்களிடம் சொல்வேன். தி.மு.க நடத்திய போராட்டங்கள், நடைமுறைப்படுத்திய சமூக நீதிக் கொள்கைகள் இந்தியாவுக்கு வழிகாட்டுகின்றன. இந்தியாவைக் காப்பாற்றி யுள்ளன” என்றார்.

ஜான்பிரிட்டாஸ் எம்.பி.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ், “இந்திய ஜனநாயகத்திற்கு நான்கு தூண்கள் உள்ளன என்று பெருமையாகச் சொல்கிறோம். ஆனால் இன்று நீதிமன்றம், நிர்வாகம் என்று ஒன்றரை தூண்கள் மட்டுமே உள்ளன. நமக்கு ஒரு பிரதமர் இருக்கிறார். நாடாளுமன்ற காம்பவுண்ட் வரை மட்டுமே வருகிறார். இரண்டு வார்த்தைகளை ஊடகங்களுக்கு சொல்லிவிட்டு, நாடாளுமன்றத்திற்குள் வராமல் சென்று விடுகிறார்” என்று குறிப்பிட்டார்.

நிகழ்வில் உரையாற்றிய அனைவருமே கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்புகளை சுட்டிக் காட்டியதுடன், இந்தியாவை மீட்கும் இந்தியா கூட்டணிக்கு கழகத் தலைவர் அவர்களின் பங்களிப்பை எடுத்துரைத்தனர்.

இரு அமர்வுகளைக் கொண்ட இந்த கருத்தரங்கின் முதல் அமர்வில் ஜனநாயகம்சமூக நீதிபொருளா தார சமத்துவம் மாநில உரிமைகள் சார்ந்த தலைப்புகளில் பத்திரிகையாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் பங்கேற்று தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

மக்களவை செயலகத்தின் முன்னாள் செகரட்டரி ஜெனரல் பி.டி.தங்கப்பன் ஆச்சாரி, ‘இந்திய அரசியலமைப்பில் ஆளுநரின் பங்கு’ என்ற தலைப்பிலும், பத்திரிகையாளர் சீமா சிஸ்டி, 2023ஆம் ஆண்டில் சமூக நீதியின் மொழி’ என்ற தலைப்பிலும், ஜே.என்.யூ.வின் ஓய்வு பெற்ற பேராசிரியர் அருண்குமார் “வளர்ச்சி யாருக்கானவ்வளவு என்ற தலைப்பிலும், ஜனநாயக செயற்பாட்டாளரும் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி.யுமான சந்தீப் தீட்சித், ‘மோடிஆர்.எஸ்.எஸ். தாக்கமும்பெரும்பான்மையின் சர்வாதிகாரமும்’ என்ற தலைப்பிலும், ஜே.என்.யூ பொருளதாரப் பேராசிரியர் ஜயதி கோஷ் ‘நிதித் கூட்டாட்சி’ என்ற தலைப்பிலும் விரிவான விளக்க மான உரையாற்றினார்கள்.

கழக எம்.பி.க்கள்!

இந்த நிகழ்வில் கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி., கழகத் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மு.சண்முகம், இராமலிங்கம், கவிஞர், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, கிரிராஜன் உள்ளிட்ட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர். ஜே.என்.யு, டெல்லிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆய்வு மாணவர்கள், அரசியல் சிந்தனையாளர்கள் பார்வையாளர்களாக இடம் பெற்றிருந்தனர்.

கோவி.லெனின் வரவேற்புரை!

கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் வரவேற்புரையாற்றினார். தகவல் தொழில்நுட்ப அணி மாநிலத் துணைச் செயலாளர் சேலம் தரணிதரன் நிகழ்ச்சி ஒருங்கிணைப்புகளை மேற்கொண்டு நன்றியுரை ஆற்றினார். தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச்செயலாளர் மதுரை பாலா நிகழ்வைத் தொகுத்தளித்தார்.

கடந்த 2019 நாடாளுமன்றத் தேர்தலின்போதே மதவாத அரசியலுக்கு எதிரான கூட்டணியை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக அமைத்து, பெருவெற்றி பெற்ற கழகத் தலைவர் அவர்களின் மதி நுட்பத்தைப் போற்றிய உரையாளர்கள், 2024 தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால்தான் இந்தியாவின் பன்முகத்தன்மையைகூட்டாட்சியை ஜனநாயக நெறிமுறையைப் பாதுகாக்க முடியும் என்பதையும் அதற்கு தி.மு.க தலைவரின் பங்கு அளப்பரியது என்பதையும் சுட்டிக்காட்டினர். டெல்லியில் திராவிட முழக்கம் ஒருங்கிணைந்து ஒலித்தது.

திருச்சியில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தில்லைநகர் கி.ஆ.பெ.விசுவநாதம் மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை நேற்று (06.08.2023) வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார். மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, ஸ்டாலின் குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் த.ராஜேந்திரன், முதன்மை கல்வி அலுவலர் சிவகுமார், கோட்டத் தலைவர்கள் விஜயா ஜெயராஜ், விஜயலட்சுமி, கண்ணன், துர்கா தேவி மற்றும் கழக நிர்வாகிகள் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி நாகராஜ், போட்டோ கமல் மோகன்தாஸ் டோல்கேட் சுப்பிரமணி, புஷ்பராஜ் கலைச்செல்வி, மணிவண்ணன், கருத்து கதிரேசன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், ஆசிரியர் பெருமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று அமைதிப் பேரணி!

மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு - மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக சொற்பொழிவாளராக - திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலை சிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட **முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் “அமைதிப் பேரணி”, இன்று (ஆகஸ்ட்7, திங்கட்கிழமை) காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.**

அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி,

தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

- சென்னை மாவட்ட தி.மு.க.

ரயில்வே விபத்துக்களை தவிர்க்க அமைக்கப்பட்டுள்ள

‘கவாச்’ அமைப்பு எவ்வளவு தூரம் பொருத்தப்பட்டுள்ளது?

மக்களவையில் ஆ.ராசா கேள்வி!

புதுடெல்லி, ஆக. 7-

ரயில்வே துறையில் கவாச் பாதுகாப்பு பற்றி மக்களவையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா, கனிமொழி மற்றும் எம்.பி.க்கள் கிருஷ்ணதேவ ராயலு, உதய் பிரதாப் சிங் ஆகியோர் ஆகஸ்டு 2 ஆம் தேதி எழுத்துப் பூர்வமாக சில கேள்விகளை எழுப்பினார்கள்.

”ரயில்வே விபத்து களைத் தவிர்ப்பதற்காக அமைக்கப்பட்ட கவாச் அமைப்பு எத்தனை கிலோ மீட்டர் ரயில் பாதைகளில் பொருத்தப்பட்டுள்ளது? மாநிலம், மண்டலம் வாரியாக அதன் விவரங்கள்...

ரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பு (TCAS) அதாவது கவாச் தொழில்நுட்பம் ஒரே பாதையில் நேருக்கு நேர் மோதுதல் மற்றும் பின்பக்கத்தில் மோதல் போன்ற விபத்துக்களை நிறுத்துவதில் பயனுள்ளதாக உள்ளதா;

கவாச் பாதுகாப்பு முறை உள்ளடக்கப்படவில்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன? பயணிகள் ரயில்களில் ஏசி மற்றும் ஏசி அல்லாத அனைத்து ரேக்கு களிலும் மோதல் எதிர்ப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளனவா? மண்டல வாரியாக விவரம் தேவை..

கடந்த மூன்று ஆண்டுகளில் மற்றும் இந்த ஆண்டு மட்டும் கவாச் பொருத்தப்பட்ட ரயில் என்ஜின்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கவாச் பாதுகாப்பு பொறிமுறைக்காக இதுவரை செய்யப்பட்ட செலவினங்களின் விவரங்கள் மற்றும் இலக்குகள் மாநில வாரியாக என்ன?” ஆகிய கேள்விகள் எழுத்துப்பூர்வமாக கேட்கப்பட்டன.

இதற்கு ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில்,

“கவாச்உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிக தொழில் நுட்பம் கொண்ட தானியங்கி ரயில் பாதுகாப்பு (Automatic Train ProtectionATP) அமைப்பு ஆகும்.

கவாச் லோகோ பைலட்டுக்கு ரயில் குறிப்பிட்ட வேகத்தில் ஓட உதவுகிறது. இன்ஜின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதில் ஒருவேளை லோகோ பைலட் தோல்வியுற்றால், தானாகவே பிரேக்குகளைப் பயன்படுத்த கவாச் வழி செய்கிறது. மேலும் மழை, பனி போன்ற சீரற்ற காலங்களில் ரயிலை பாதுகாப்பாக இயக்க உதவுகிறது.

கவாச் பாதுகாப்பு அமைப்பானது முதலில் பிப்ரவரி 2016 முதல் பயணிகள் ரயில்களில் பயன்படுத்தப்படுவதற்குகளச் சோதனைகள் தொடங்கப்பட்டன. அதனால் பெற்ற அனுபவத்தின் அடிப்படையிலும் சுயாதீன பாதுகாப்பு மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகள் அடிப்படையிலும் கவாச் தொழில் நுட்ப அமைப்புக் கருவிகளை சப்ளை செய்வதற்கு 2018-19 இல் மூன்று நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டன. ஜூலை 2020 இல் கவாச் ஒரு தேசிய ஏ.டி.பி. அமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தென் மத்திய ரயில்வேயில் கவாச் இதுவரை 1465 ரூட் கி.மீ பாதை என்ற அளவில் பொருத்தப்பட்டுள்ளது. 121 இன்ஜின்களில் பொருத்தப்பட்டுள்ளது.

இதன் கீழ் தெலுங்கானாவில் 684 ரூட் கிலோ மீட்டர், ஆந்திரப் பிரதேசத்தில் 66 ரூட் கிலோ மீட்டர், கர்நாடகாவில் 117 ரூட் கிலோ மீட்டர், மகாராஷ்டிராவில் 598 ரூட் கிலோ மீட்டர் அளவுக்கு பொருத்தப்பட்டுள்ளன.

கவாச் பாதுகாப்பு பொறிமுறையை டெல்லி மும்பை, டெல்லிஹௌரா ஆகிய சுமார் 3 ஆயிரம் ரூட் கிலோ மீட்டர் ரயில் பாதைகளில் பொருத்துவதற்கான டெண்டர் வழங்கப்பட்டுள்ளது. இந்த பாதையில் கவாச் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி மேற்கு வங்காள மாநிலத்தில் 229 ரூட் கிலோ மீட்டர், ஜார்கண்ட் 193 ரூட் கிலோ மீட்டர், பிகார் 227 ரூட் கிலோ மீட்டர், உத்தரபிரதேசம் 943 ரூட் கிலோ மீட்டர், டெல்லி 30 ரூட் கிலோ மீட்டர், ஹரியானா 81 ரூட் கிலோ மீட்டர், ராஜஸ்தான் 425 ரூட் கிலோ மீட்டர், மத்திய பிரதேசம் 216 ரூட் கிலோ மீட்டர், குஜராத் 526 ரூட் கிலோ மீட்டர், மகாராஷ்டிரா 84 ரூட் கிலோ மீட்டர் என்ற வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்திய ரயில்வே மேலும் 6 ஆயிரம் ரூட் கிலோ மீட்டர் ரயில் பாதைகளில் கவாச் பாதுகாப்பு அமைப்பு பொருத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து வருகிறது.

இப்போதைக்கு கவாச் பாதுகாப்பு தொழில் நுட்பக் கருவிகளை உற்பத்தி செய்வதற்காக மூன்று இந்திய நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் கவாச் திறனை அதிகரிக்கவும், செயல்படும் அளவை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கவாச் விற்பனை நிறுவனங்களை அதிகரிக்கவும் முயற்சிக்கப்பட்டு வருகிறது.

கவாச் அமைப்புக்கான செலவைப் பொறுத்தவரையில்... ரயில் நிலைய உபகரணங்கள் உட்பட இருப்புப் பாதைகளில் கவாச் தொழில் நுட்பத் தைப் பொருத்துவதற்கு ஒரு கிலோ மீட்ட ருக்கு தோராயமாக 50 லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. லோகோக்களில் பொருத்துவதற்கு ஒரு லோகோவிற்கு 70 லட்சம் ரூபாய் ஆகிறது.

கவாச் பொருத்துவதற்காக இதுவரை 351 கோடியே 91 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2023-2024 பட்ஜெட்டில் கவாச் பாதுகாப்பு தொழில்நுட்பம் பொருத்துவதற்காக 710 கோடியே 12 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்திய ரயில்வே மாநில வாரியாக நிதி ஒதுக்குவதில்லை, மண்டல வாரியாகத் தான் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதனால் கவாச் பாதுகாப்பு அமைப்பு பொருத்துவதற்கான திட்டங்கள் மண்டல வாரியாக அனுமதிக்கப்பட்டு வருகின்றன” என்று பதிலளித்துள்ளார் ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்.

கலைஞரின் பேனா!

முக்குலத்தோர் சமூகத்தை குற்றப் பரம்பரையினர் என அரசு ஆவணங்களில்குறிப்பிடப் பட்டதை மிக அழகாக நாகரிகமாக சீர் மரபினர் என அழகு தமிழில் அரசு ஆவணங்களில் எழுத ஆணையிட்டார். அது போல "நொண்டி, ஊமை, குருடன்" என நாகரிகமில்லாமல் அழைத்ததை மாற்றி "மாற்றுத் திறனாளி" என மனிதாபிமானம் பொங்கும் சொற்களில் எழுதி மாற்றியது தான் கலைஞரின் பேனா . மூன்றாம் பாலினத்தவரை "அலி" என்றும் "ஒன்பது" என்றும் இந்த பாழாய்ப்போன சமூகம் அழைத்துக்கொண்டிருந்தது. அவர்களை திருநங்கைகள், திருநம்பி என்றும் எழுதி அவர்களின் மனம் குளிர்வித்ததுதான் கலைஞரின் பேனா.